செய்தி வெளியீடு எண்: 214 நாள்: 06.03.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5.3.2019 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் கரூர் மாவட்டம், மண்மங்கலம் மற்றும் அரவக்குறிச்சி வருவாய் வட்டங்களை சீரமைத்து, வேலாயுதம்பாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள புகளூர் வருவாய் வட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

மக்களை தேடி அரசு எனும் சீரிய கோட்பாட்டின்படி, அரசின் மக்கள் நலத்திட்டங்களை ஏழை எளிய மக்களிடையே முறையாக கொண்டு சென்று, அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மேம்பாட்டிற்காக, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல், போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கரூர் மாவட்டம், மண்மங்கலம் மற்றும் அரவக்குறிச்சி வருவாய் வட்டங்களை சீரமைத்து, வேலாயுதம்பாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு, தென்னிலை, க. பரமத்தி மற்றும் புகளூர் ஆகிய 3 குறுவட்டங்களுடன், 27 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி புதிதாக உருவாக்கப்பட்டுள்ள புகளூர் வருவாய் வட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., வருவாய் நிருவாக இணை ஆணையர் திருமதி எம். லஷ்மி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 06.03.2019